Circular: GR/5/2012

# சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதரர் சகோதரிகளே,

நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.

பெரும் ஆனந்தத்தின், இதய மகிழ்வின் அற்புதமான விழாவாகிய, நமது மெசியா பிறந்ததன் நினைவான கிறிஸ்மஸ் நாம் கொண்டாட இருக்கிறோம். இது கடவுள் மனிதரானதைக் கொண்டாடும் விழா. கடவுள் நம்மீது கொண்ட அளப்பரிய அன்பின் பொருட்டே தம்மையே வெறுமையாக்கி மனிதரானார்; மாறாக, நமது தகுதிகளின் பொருட்டல்ல. மானிடர் தமக்குரியவர்கள் என்னும் முறையில் தனது நிறைந்து ததும்பும் அன்பை பொழிந்ததையே இம்மனுவுரு ஏற்றல் வெளிப்படுத்துகிறது. இவ்வுலகமும் மனித இனம் முழுமையும் கடவுளுக்குரியது; ஆதலால் உலகையும் மனித இனம் முழுவதையும் மீட்பது கடவுளின் பொறுப்பு. அதனாலேயே 'வார்த்தை மனுவுருவானார்' (யோவா 1, 14).

மகன் தந்தைக்கு உரியவர். ''என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்'' (மாற் 1, 11). உலகு தந்தைக்கும் மகனுக்கும் உரியது. ''உமக்கு உரியவர்களாய் இருந்த அவர்களை நீர் என்னிடம் ஒப்படைத்தீர். அவர்களும் உம் வார்த்தைகளைக் கடைப்பிடித்தார்கள். நீர் எனக்குத் தந்தவை அனைத்தும் உம்மிடமிருந்தே வந்தவை என்பது இப்போது அவர்களுக்குத் தெரியும்'' (யோவா 17, 6–7).

உலகும் மனித இனமும் கடவுளுக்கு உரியனவாய் இருந்ததால் அவரே உலகின் பாவங்களையும் பலவீனங்களையும் ஏற்றுக்கொண்டு அதனை விடுதலை செய்யவும் மீட்கவும் இறங்கி வந்தார்; நீதியினுடையவும் அமைபிதியினுடயைவும் இறையரசை ஏற்படுத்தவும் செய்தார். அவர் நம்மிடையே இறங்கி வந்து தமது கூடாரத்தை நம் மத்தியில் ஏற்படுத்தி தமது அன்பையும் இரக்கத்தையும் நமக்கு உணர்த்தினார். இம்மீட்பின் திட்டத்தில் தந்தைக் கடவுள் தனிமையாக இல்லை; மூதாதையர்கள், அரசர்கள், நீதிபதிகள், இறைவாக்கினர்கள், இறுதியாக தமது சொந்த மகன் ஆகியோரை உள்ளடக்கிய பெரும் திரள் உள்ளது. மகனும் தனிமையாக இல்லை; பன்னிரண்டு திருத்தூதர்கள், எழுபத்திரண்டு சீடர்கள், மேலும் அவரை பின்பற்றிய ஆயிரக்கணக்கானோர், புனிதர்கள், தூய வாழ்வு வாழ்ந்த ஆண்களும் பெண்களும், குருக்கள், துறவியர் மற்றும் அவரால் அழைக்கப்பெற்ற பொதுநிலையினர் யாவரும் உள்ளனர்.

கிறிஸ்தவர்ளாக வாழ அழைப்புப் பெற்றவர்கள் ஒவ்வொருவரும் இம்மீட்புத்திட்டத்தில் பங்கேற்க கடன்பட்டவர்கள். குறிப்பாக, கடவுளிடமிருந்து தொலையில் உள்ளவர்கள் மற்றும் பல்வகையான பெரும் ஆபத்துக்களுக்கு உட்பட்டவர்களுக்கு மீட்பை கொணரும் பெரும் பொறுப்பு கிறிஸ்தவர்களுக்கு உண்டு. கடவுள் மனித இனத்தை தமக்குரியதாகக் கொண்டதைப் போன்று கடவுளின் மீட்புப்பணியில் பங்கேற்க அழைக்கப்படும் ஒவ்வொருவரும் இவ்வழைப்பை தமக்குரியதாக மாற்ற வேண்டும். நாம் இப்பணியை நமக்குரியதாக்க வேண்டும், மேலும், திருச்சபையயை, பங்கை, குடும்பத்தை அதன்மூலம் நமது பொறுப்பில் தரப்பட்டுள்ள பிள்ளைகள் ஒவ்வொன்றையும் நாம் நமக்கு உரியதாகக் கொள்ள வேண்டும். இந்த உரிமையானது, நாம் திருச்சபையின் வழிமுறைகளையும் இறையியல் சிந்தனைகளையும் உரிய மரியாதையுடன் கண்டு

மதித்து நடப்பதிலும், தலத்திருச்சபையில் நாம் கொள்ளும் ஈடுபாட்டிலும் எண்பிக்கப்பட வேண்டும். கிறிஸ்தவ மதிப்பீடுகளையும் திருச்சபையின் நெறிமுறைகளிலும் நாம் வைக்கின்ற நம்பகத்தன்மையில் இவ்வுரிமை உணர்வு வெளிப்பட வேண்டும். இது, நமது பங்குதளம் நமக்கு உரியது என்னும் ஆழமான உரிமை உணர்விலும் அதன் பணிகளிலும் வாழ்விலும் நாம் கொள்ளும் ஈடுபாட்டிலும் வெளிப்பட வேண்டும்.

கிறிஸ்வதர்களாக வாழ அழைக்கப்பட்டவர்கள் என்ற உண்மை ஒவ்வொரு தனிநபரும் பெற்று அதை உரியதாக்கி அதை கவனமுடன் ஊட்டி வளர்க்க வேண்டும். நாம் நம்மைக் குறித்தே கவனமுடையவர்களாக மாற வேண்டும்; நாம் உடலிலும், உள ஆரோக்கியத்திலும், உணர்ச்சிகளை மேலாண்மை செய்வதிலும் அன்றாடம் வளர்ச்சி அடைய கவனம் செலுத்த வேண்டும். நாம் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். நல்ல நூல்களை வாசித்து பொது அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும். சிந்திக்கவும், பகுப்பாய்வுக்கு உட்படுத்தவும், சிந்தனைகளை கோர்வையாக்கவும் தேர்ச்சி பெற வேண்டும். நமது ஆன்மீக காரியங்களில் நாம் நாம் காட்டும் ஆர்வமே நாம் கடவுளின் பணியை முன்னெடுக்க போதிய இறையருளை பெற்றுத் தரும். ஒவ்வொருவரும் தமது வலிமைகளையும் வெற்றிகளையும் உயர்வாக கருத வேண்டும். அதே வேளை தங்களுக்குரிய திறமைகளை புதைத்து வைக்காமல் வளர்ச்சிக்காக பயன்படுத்த வேண்டும். அதைப்போன்றே நாம் நமது நமது பலவீனங்களையும் தோல்விகளையும் நமதாக ஏற்றுக் கொள்ளவேண்டும். அங்ஙனம் ஏற்காமல் இருக்கும் போது, நாம் நேர்மையற்றவராயும், சுயம் நேர்மையானவர்கள் கருதும் மனநிலைகளுக்கும் தள்ளப்பட்டு நமது போலியான ஆளுமையை வெளிக்காட்டும் அவல நிலைக்குத் தள்ளப்படுவோம். நாம் இறுதியாக மனதில் கொள்வோம்; நமது பிள்ளைகள் நேர்மான திறந்த மனநிலையுடைய மனிதர்களையே நோக்கிப் பார்த்திருக்கின்றனர்.

கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் கத்தோலிக்கத் திருச்சபையையும் சீரோ மலபார்த் திருச்சபையையும் நமது பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள குடும்பங்களையும் நமதாக்கவும் உரியதாக்கவும் அழைக்கிறது. நமது உடல், உள்ள, அறிவுசார், ஆன்மீக காரியங்களைக் குறித்து கவனம் செலுத்தி, கிறிஸ்தவர்களாக வாழ நாம் பெற்றுக் கொண்ட அழைப்புக்கு ஏற்ற வாழ்க்கையை நாம் வாழ்கிறோமா? நாம் சார்ந்திருக்கும் பங்குதளம் நமக்குரியது என்பதை நாம் முழுமையாக உணர்ந்தவர்களா? இதுவே நாம் பெற்றிருக்கும் பணிக்கான அழைப்பு.

விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் இறையருள் நிரம்பிய கிறிஸ்மஸ் மற்றும், வளம் நிறைந்த புத்தாண்டை வாழ்த்துகிறேன். கிறிஸ்மஸ் உங்கள் வாழ்க்கையில் நம்பிக்கையையும், வாழ்வில் மாற்றத்தையும், மனதில் நிறைவையும் அருள்வதாக.

ஈசோவில் அன்புடன்

தக்கலை
14.12.2013

மார் இராஜேந்திரன்
(துக்கலை மறைமாவட்டம்)

---

இச்சுற்றுமடலை 212 டிசம்பர் 16 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கிடையே வாசிக்கவும்.